1981 மார்ச் 27

திரு சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே பீடியைத் தொழிலாகக் கொண்டிருக்கிற தொழிலாளர் களின் எண்ணிக்கை எவ்வளவு? எந்த எந்த, மாவட்டத்தில் இந்தப் பீடித் தொழில் கூடுதலாக நடைபெற்றுக் கொண்டிருக் கிறது என்பதைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போட வேண்டும்.

தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாடு

*வினா எண் 514—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கலந்துகொண்டாரா ?

(ஆ) ஆம், எனில் அக்கூட்டத்தில் எடுக்கப்பெற்ற முடிவுகள் பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற தொழிலாளர்கள் அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட 49 முடிவுகளில் முக்கிய முடிவுகள் பின்வருமாறு—

(1) 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தில் '' பொருத்தமான அரசு '', '' தொழில் '', '' சம்பளம் '' '' தொழிலாளர் '' போன்ற சொற்களுக்கான பொருள் விளக் கங்களைத் திருத்துதல் அல்லது விரிவுபடுத்துதல், தனிப்பட்ட தொழிலாளி தொழில் நீதி மன்றத்தில் நேரிடையாக அரசின் தலையீடு இன்றி வழக்குத் தொடர வழி செய்தல், சமரச அலுவலர்கட்கு அதிக அதிகாரங்கள் அளித்தல், தொழிற் தக ராறுகளில் துரிதமாக முடிவு காண கால நிர்ணயம் செய்தல், தொழில் நீதி மன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகளை அமுல்படுத்த அவைகளுக்கே அதிகாரம் அளித்தல் போன்றவற்றிற்காகத் தேவை யான திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

(2) 1946 ஆம் ஆண்டு தொழில் நிலை ஆணைகள் சட் டத்தில், பணியாளர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப் பட்டிருக்கும் காலத்தில் வாழ்க்கைப்படி வழங்க வழி செய்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.

(3) 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற் சங்கங்களைப் பதிவு செய்ய நிறுவனத்தில் உள்ள வர்களில் குறைந்த பட்சம் 10 சதவீதமாவது உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தல், குறைந்த பட்ச சந்தாவினை ஒரு ரூபாயாக் உயர்த்துதல், விவசாய கிராமப் புறத் தொழிலாளர்கட்கும் சட்டத்தினைப் பொருந்தச் செய்தல், நிர்வாகப் பொறுப்பில் வெளியார்கள் 25 சதவீதத்திற்குமேல் இருக்கக்கூடாது என்று விதித்தல் முதலியவற்றிற்காக திருத்தங் கள் செய்ய வேண்டும்.

(4) பல்வேறு சம்பளக் குழுக்களின் பரிந்துரைகளை அமுல் படுத்த மைய அரசு ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும்.

(5) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தில், அடிக்கடி சம்பள விகிதங்களை மாற்றி அமைத்தல் போன்ற வற்றிற்காகத் திருத்தங்கள் செய்ய வேண்டும்.

(6) இதே போல் ஊதியக் கொடைச் சட்டம், பணியாளர் வைப்பு நிதிச் சட்டம், பணியாளர் மாநில காப்புறுதிச் சட்டம், முதலிய சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

(7) மேலும், தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு, வீட்டு வசதித் திட்டம், பாதுகாப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல் போன்ற பல் வேறு பொருள்கள் பற்றியும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 49 முடிவுகள் வந்திருப்பதாகச் சொன்னார் கள். அதைச் சுருக்கி 7 முடிவுகளாகச் சொல்லி இருக்கிறார்கள். மீதி இருக்கக்கூடிய முடிவுகள் அச்சடிக்கப்பட்டு இந்த அவைக்கு அளிக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புவதோடு, எடுக் கப்பட்ட முடிவுகள் எவ்வளவு காலத்திற்குள் அமுல் நடத்தப்படும் என்பது பற்றி முடிவெடுக்கப்பட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, இவைகளைச் செயல்படுத்துவதற்கு 4 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குழுவில் நான் கூட உறுப் பினராக இருக்கிறேன். இந்த 49 முடிவுகளையும் சைக்ளோஸ் டைல் செய்து உறுப்பினர்களுக்குக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி பரிசிலனை செய்யப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 4 குழுக்கள், அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 4 குழுக்களும்

1981 மார்ச் 27]

எந்தெந்த முறையிலே அமைக்கப்பட்டிருக்கின்றன? யார் யார் அதில் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 4 குழுக்களிலும் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், ஒரு குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேன் என்பது மட்டும் உறுதி.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் தொழில் தகராறுகளில் தலையிடுகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு வேண்டும் என்று, மத்திய அமைச்சர் யோசனை கூறியது உண்மையா? அதை நம்முடைய தமிழக அரசும், தமிழக அமைச்சரும் ஏற்றுக்கொண்டார்களா அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்தார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாநிலத்தில் 30 நாட்களுக்கும் மேலாக ஏதாவது தொடர்ந்து வேலை நிறுத்தம் நடக்குமானால் மத்திய அரசு தலையிட வேண்டும் என்று ஒரு யோசனை கொண்டு வந்தது உண்மை. நீங்கள் எல்லாம் பெருமைபடக்கூடிய அளவுக்கும், சந்தோஷப்படக்கூடிய அளவுக்கும் அதை எதிர்த்தது தமிழக அரசு. மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டது.

நெல்லித்துறை பகுதியிலிருந்து கோவைக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண். 515—திரு ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகருக்கு நெல்லித்துறை பகுதியில் இருந்து குடிநீர் கொண்டுவர திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. ஏ. டி. குலசேகர் : தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டில் கோவை நகரில் இத்திட்டத்திற்கு மதிப்பீடுகள் போடப்பட்டுள்ளது. அதன் விவரம் அரசுக்குத் தெரியுமா ? அதை மேற்கொண்டு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு பவானியில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கின்றது.